திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியத்துக்கு குட்பட்ட தங்கச்சியம்மா பட்டி ஊராட்சியில் வாக்காளர்களுக்கு அர. சக்கரபாணி எம். எல். ஏ. நன்றி தெரிவித்து பேசினார் .

தென்காசி தெற்கு மாவட்டம் குற்றாலம் பேரூர் பகுதியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முன்பு தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் முழு திருஉருவச் சிலைக்கும், நன்னகரத்தில் அமைந்துள்ள சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் முழு திருவுருவ சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதைச் செலுத்தினார். நிகழ்வில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் குற்றாலம் பேரூர் செயலாளர் சங்கர் என்ற குட்டி ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், பொறியாளர் அணி கருப்பண்ணன், வழக்கறிஞர் வேலுச்சாமி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

குற்றாலம் பேரூர் செயலாளர் குட்டி தலைமை!தென்காசி குற்றாலம் பேரூர் பகுதியில்

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் வாக்காளர்களுக்கு நன்றி!

கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை,வே.ஜெயபாலன் - பொ.சிவபத்மநாதன் பங்கேற்பு!

தென்காசி, மே 20 - தென்காசி சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக சட்ட மன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் நேற்று முன்தினம் (17 ம் தேதி) குற்றாலம் பேரூர் பகுதியில் பேரூர் செயலாளர் சங்கர் என்ற குட்டி தலைமையிலும் மற்றும் மேலகரம் பேரூராட்சி குடியிருப்பு, நன்னகரம்,வடக்கு நன்னகரம்,எழில் நகர்,ஸ்டேட் பாங்க் காலனி,தெப்பக்குளம்,மேலகரம் பாரதி நகர் உள்ளிட்ட பகுதிகளில் வீதி வீதியாக சென்று வாக்காளர் களுக்கு நன்றி தெரிவித்தார். இந்நிகழ்வில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் வாக்காளர் களுக்கு நன்றி தெரிவிக்கும் போது பேசியதாவது.

கழகத் தலைவர் அவர்களின் நல்வாழ்த்துக்களோடும்,ஆசியுடனும் தென்காசி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க.சார்பில் போட்டியிட்ட எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து 10,299 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த அனைத்து வாக்காளர் களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.மேலும் நீங்கள் வைத்த கோரிக்கைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றி தருவேன். உங்கள் அனைவரையும் சுழற்சி முறையில் கிராமங்கள் தோறும் வருகை தந்து குறைகளை கேட்பேன் என்று கூறினார்.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம்,முன்னாள் அரசு வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வேலுச்சாமி, மேலகரம் பேரூர் துணைச் செயலாளர் ஜீவானந்தம், பொருளாளர் ரமேஷ் குமார்,

அவைத் தலைவர் சலீம்,தலைமை கழக பேச்சாளர் கடையநல்லூர் இஸ்மாயில்,முன்னாள் ஒன்றிய செயலாளர் காசிதர்மம் துரை, பொறியாளர் அணி கருப்பணன், தொண்டரணி துணை அமைப்பாளர் சுரேஷ்,வார்டு செயலாளர்கள் ஈஸ்வரன், குருசாமி, பகவதிராஜ், பாலசுப்பிரமணியன்,குத்தலிங்கம், கபீர் செரிப்,காசி விஸ்வநாதன், கவுன்சிலர்கள் சுந்தரம் என்ற சேகர்,கபிலன், குற்றாலநாதர் கோயில் அறங்காவலர் வீரபாண்டியன், கணேசன், ஆவின் முருகன், சூர்யா மணி என்ற ஈஸ்வரன், சந்திரன், பட்டன், கணேசன், ஈன முத்துப்பாண்டியன், குமாரவேல், இளைஞர் அணி பார்த்திபன், மாணவரணி கதிர்,ஜிம் ஜெய்சங்கர், சுப்ரமணியன், மாரியப்பன் பட்டன், பட்ட தேவர்,வீரபாண்டி, சங்கர பாண்டியன், ரயில்வே சந்திரன், பசுங்கிளி, முருகன், கந்தன், ம.தி.மு.க.வெங்கட் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் குற்றாலத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் முழு திருவுருவ சிலைக்கும், நன்னகரம் பகுதியில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் முழு திருவுருவ சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதியில்

முன்னாள் அமைச்சர் இரா.ராஜேந்திரன் வாக்காளர்களுக்கு நன்றி!

சேலம், மே 20- அனைத்துத் தரப்பு மக்களுக்குமான ஆட்சியை நடத்தி திட்டங்களை வகுத்து அளித்தவர் தி.மு.க. தலைவர் என்று முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் புகழாரம் சூட்டினார்.

தி.மு.க. தலைவர் உத்தரவிற்கிணங்க சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் ராஜேந்திரன் வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக கன்னங்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட மாரியம்மன் கோவில் திடலில் வாக்காளர்களை நேரில் சந்தித்த முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் கடந்த ஐந்து ஆண்டுகளாக மகளிர் மாணவர்கள் தொழிலாளர்கள் நெசவாளர்கள் விவசாயிகள் என அனைத்து தரப்பு மக்களுக்குமான திட்டங்களை நிறைவேற்றி இந்தியாவே வியக்கும் வகையில் ஆட்சி நடத்தியவர் தி.மு.க. தலைவர் என்று பேசிய அவர், தற்போது வெற்றி வாய்ப்பை இழந்தாலும் மக்களுக்கான பணியில் தொடர்ந்து ஈடுபடுவோம் என்றும் தி.மு.க. என்பது மக்களுக்கான இயக்கம் என்றும் பெருமிதத்தோடு கூறிய அவர் கடந்த ஐந்து ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் நிறை வேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துரைத்து வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கன்னங்குறிச்சி பேரூர் கழக செயலாளர் தமிழரசன் பொதுக்குழு உறுப்பினர் நாசர் கான் சேலம் மாநகர செயலாளர் ரகுபதி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

தென்காசி வடக்கு மாவட்டம் சிவகிரி பேரூர் கழக பொறுப்பாளர் சேது சுப்பிரமணியன் (வயது 46) அவர்கள் திடீர் உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.அன்னாரது உடலுக்கு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர்,வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா,மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம்,ஒன்றிய செயலாளர் பெரியதுரை ஆகியோர் உள்ளனர்.

மதுரை அண்ணா நகரில் நடைபெற்ற மாநகர் மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் கோ.தளபதி மாவட்ட அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு, முன்னாள் அமைச்சர்கள் பொன் முத்துராமலிங்கம், பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், மாநில தீர்மானகுழு செயலாளர் அக்ரி கணேசன், மாவட்ட நிர்வாகிகள் மூவேந்திரன், ராகவன், முருகவேல் உள்ளிட்டோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்

விளாத்திகுளம் வட்டம் அரியநாயகிபுரம் கிராமத்தில் சுன்னத் ஜமாஅத் மற்றும் வளர்பிறை இளைஞர் பேரவை நடத்தும் உத்தம திருநபியின் உதய தினம் சமத்துவ விருந்து மற்றும் கந்தூரி விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஜீ.வி.மார்க் கண்டேயன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் விளாத்திகுளம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குமரகுருபரராமநாதன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தென்காசி தெற்கு மாவட்டம்

சிவகிரி பேரூர் கழக பொறுப்பாளர் வி.எஸ்.ஜி. சேது சுப்பிரமணியன் மறைவு!

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு,ராணி ஸ்ரீகுமார் எம்.பி அஞ்சலி!

பெற்றது.

தென்காசி, மே 20 – தென்காசி தெற்கு மாவட்டம் சிவகிரி ராஜாஜி தெருவில் வசித்து வரும் சிவகிரி பேரூர் கழக பொறுப்பாளர் வி.எஸ்.ஜி.சேதுசுப்பிரமணியன் அவர்கள் (வயது 46) கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட திடீர் உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவ மனையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப் பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி (18.05.2026 திங்கட் கிழமை) அன்று இரவு 930 மணி அளவில் மறைவெய்தினார் என் பதை அறிவிக்க வருந்துகிறோம். இது பற்றிய தகவல் அறிந்ததும் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, முன்னாள் அமைச்சர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ச.தங்கவேலு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் அன்னாரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

தென்காசி தெற்கு மாவட்டம் சிவகிரி ராஜாஜி தெருவில் வசித்து வரும் சிவகிரி பேரூர் பொறுப்பாளர் வி.எஸ்.ஜி.சேது சுப்பிரமணியன் அவர்களுக்கு (வயது 46) கடந்த சில நாட்களுக்கு முன்பு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. அதனால் உடனடியாக அவரை மருத்துவம னையில் சிகிச்சைக்காக அனும தித்தனர்.அங்கு சிகிச்சை பலனின்றி (18.05.2026 –திங்கட் கிழமை) அன்று இரவு 9:30 மணி அளவில் இயற்கை எய்தினார். அவருக்கு தேவி (வயது 39) மனைவியும்,கௌதம் (வயது 15) என்ற மகனும் உள்ளனர்.

இறந்த சிவகிரி பேரூர் பொறுப்பாளர் வி.எஸ்.ஜி.சேது சுப்பிர மணியன் அவர்களின் உடலுக்கு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர். ராணி ஸ்ரீகுமார்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு,சீனிவாசன், பரமகுரு,மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பக விநாயகம்,

மாநில வர்த்தக அணி இணை செயலாளர் ச.முத்துசெல்வி வாசுவடக்கு ஒன்றிய செயலாளர் பொன்.முத்தையா பாண்டியன் மாவட்ட துணை செயலாளர் மனோகரன், மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் சுமதி, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மணிகண்டன், பேரூராட்சி தலைவர் கோமதிசங்கரி, சுந்தர் வடிவேலு,சிவகிரி பேரூர் கழக தேர்தல் பொறுப்பாளர்கள் நல்லசிவம், கந்தவேல்,அவைத்தலைவர் துரைராஜ் பொருளாளர் பரமசிவன், தங்கராஜ், கார்த்திக், தங்கபாண்டியன்,வெங்கடேஷ், இளையராஜா, பாலகுரு, சரவணன், உள்பட கழகத்தினர் மற்றும் உறவினர்கள், பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச் சடங்கு நேற்று (19.05.2026 செவ்வாய்க்கிழமை)அவரது இல்லத்தில் நடை

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

டி.எம். பார்த்தசாரதி

மே 20 (1984)



கழக வரலாற்று நூல் ஆசிரியர். தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேரன்பிற்குரியவர்.

கழகம் தோன்றியபோது, நமது கொள்கைகளை எடுத்துக்கூற "மாலைமணி" எனும் நாளேடு கண்டவர்.

"பெரியார் அவர்களின் பகுத்தறிவு சூறாவளி பிரச்சாரப் படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர், எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்! என்ற வைராக்கிய உள்ளம் படைத்தவர், களம் பலகண்டவர், பலமுறை சிறை சென்ற தியாக சீலராக விளங்கியவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.